https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

21ST JANUARY 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 63




# தம்மிக்க: இன்னும் முடிவில்லை

## ரணிலை நிறுத்துமாறு அழுத்தம்

தம்மிக்க பெரேராவை மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று மொட்டு கட்சி வட்டாரம் தெரிவிக்கிறது.

பசில் ராஜபக்சவே தம்மிக்கவை நிறுத்துவதற்கு விரும்புகிறார் என்று கூறும் மொட்டு தகவல்கள்

02 ►

# செங்கடல் யுத்தம் இலங்கைக்கு இலாபம்

செங்கடலில் இஸ்ரேல் ஆதரவு கப்பல்கள்மீது ஹவூதி போராளிகள் நடத்துகின்ற தாக்குதல் காரணமாக இலங்கைக்கு நன்மை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தத் தாக்குதல் காரணமாக கப்பல்கள் வேறு வழிகளை

02 ►



# மொட்டு உறுப்பினர்களை ஈர்ப்பதற்கு அமைச்சுப் பதவிகள்

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி பதவியை ஏற்றது முதல் இப்போதுவரை கிடப்பில் போடப்பட்டிருக்கும் மொட்டு கட்சி உறுப்பினர்களுக்கான அமைச்சுப் பதவிகளை விரைவில் வழங்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று ஜனாதிபதியின் வட்டாரத்தில் இருந்து அறிய முடிகிறது,

அவர் பதவியேற்றது முதல் மொட்டு எம்பிக்கள் 10 பேருக்கு அமைச்சுப் பதவி கேட்டு எழுத்து மூலம் பசில் ராஜபக்சவால் அப்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

பல காரணங்களை முன்வைத்து அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்க முடியாது என்று ஜனாதிபதி கூறி வந்தார்.

02 ►

# கரட்டை பாதுகாப்பதற்கு பாதுகாப்பு ஊழியர்கள் நியமிப்பு

கரட்டின் விலை அதிகரித்திருப்பதால் தம்புள்ளை வர்த்தக மையத்துக்கு கொண்டு வரப்படும் கரட் மூட்டைகளை பாதுகாப்பாதற்காக விசேட பாதுகாப்பு ஊழியர்க்ள நியமிக்கப்பட்டுள்ளனர் என்று வர்த்தகர்கள் கூறியுள்ளனர்.

ஒரு பாதுகாப்பு ஊழியருக்கு ஒரு நாளைக்கு 1500 ரூபா சம்பளம் கொடுக்கப்படுகிறது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

கரட் மூட்டைகளை திருடும் சம்பவங்கள் இடம்பெறுவதே இதற்கு காரணம் என்று கூறுகிறார்கள்.

ஒரு கிலோ கரட்டின் விலை 2500 ரூபா வரை



02 ►



புதுசுடர்
www.puthusudar.lk
2024 JANUARY 21 - SUNDAY

# நாமலின் எதிர்காலம்

தோல்வி பயத்தில்-குழப்பத்தில் உள்ளார் நாமல் ராஜபக்ச.அதற்கு காரணம் ஜனாதிபதியின் பொருளாதார கொள்கை மேலும் மேலும் மக்களை சிக்கலில் தள்ளுவதுதான்.

இதனால் அவர் ரணில் எதிர்ப்பு நிலைப்பாட்டை பின்வற்றி வருவதை அவதானிக்க முடிகிறது.இது மக்களுக்காக அல்ல தனது அரசியல் எதிர்காலத்துக்காக என்பதே உண்மை.

அதனால்தான் மக்கள்மீது மேலும் சுமையை ஏற்றும் வட் வரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அத்துமீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை நாமல்.

ஜனாதிபதியாகவிருந்த கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்டப்பட்டார். மஹிந்த பிரதமர் பதவியில் இருந்து விரட்டப்பட்டார்.அவ்வளவுதான்.

அதனால் மக்களின் பிரச்சினைகள் தீரவில்லை.

கோத்தாவின் இடத்துக்கு ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக வந்தார்.

அப்போதிருந்த பிரச்சினையான எரிபொருள் தட்டுப்பாட்டுக்கும் மின் வெட்டுக்கும் தீர்வை வழங்கினார்.

ஆனால்,பொருட்களின் விலைகள் குறையவே இல்லை.இப்போது பார்த்தால் பல பொருட்களின் விலைகள் கோத்தாவின் ஆட்சியில் இருந்ததை விடவும் அதிகமாகவே உள்ளன.

மின் கட்டணம் தாறுமாறாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மின் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் 5 லட்சம் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

மின் கட்டணம் 3 ஆயிரம் ரூபாவைத் தாண்டினால் மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது.

மக்கள் துன்பத்துக்கு மேல் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெறுவதற்காக அது விதித்த நிபந்தனைகள் அனைத்தையும்

அதிகரிக்கப் போய்த்தான் மக்கள் இவ்வளவு சிக்கலுக்குள் வீழ்ந்துள்ளனர்.

இந்த வருடமாவது மக்களுக்கு விடிவு கிடைக்குமா என்று பார்த்தால் இப்போது இருப்பதைவிட மிக மோசமாகத்தான் அமையப் போகிறது நிலைமை.

இந்த வருடம் ஜனவரியில் இருந்தே மக்களுக்கு கெட்ட காலம் தொடங்கிவிட்டது. ஜனவரியில் இருந்து இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருத்தரும் மேலதிகமாக 30ஆயிரம் ரூபாவை வாரியாகச் செலுத்தவுள்ளனர்.

இதைச் சமாளிப்பதென்றால் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் 10 ஆயிரம் ரூபா அதிகரிக்கப்பட்டு அது ஏப்ரல் மாதத்தில் இருந்துதான் வழங்கப்படும்.

இது மக்களை ஏமாற்றும் செயல்.

அரச ஊழியர்களோ 20 ஆயிரம் ரூபா அதிகரிப்பை கோருகிறார்கள்.

துறைமுக ஊழியர்கள் அடுத்த 3 வருடங்களுக்கு 36 வீத சம்பள அதிகரிப்பைக் கோருகிறார்கள்.

ஆனால், இவை எவையும் நடக்கப்போவதில்லை என்பதை எல்லோரும் அறிவோம் அதற்காகப் போராட்டங்கள் நடத்தியும் வேலை இல்லை.

பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் உயருகின்றன.முதலாளிமார் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வேண்டுமென்றே பொருட்களின் விலைகளை உயர்த்துவது ஒரு பக்கம்.

அரசின் இயலாமையால் விலைகள் உயர்வது இன்னொரு பக்கம்.

எல்லாமே இறுதியில் மக்களின் கழுத்தைத்தான் நெருக்குகின்றன.

மக்கள் வாழ வேண்டும் என்பதை விட அரசு வாழ வேண்டும் என்பதுதான் இந்த ஆட்சியாளர்களுக்கு முக்கியமாகத் தெரிகிறது.

அரசின் அனைத்து நடவடிக்கைகளும் அரசைக் காப்பாற்றுவதாகவே உள்ளது. மக்களைக் காப்பாற்றுவதாக இல்லை. மின் கட்டண அதிகரிப்பு என்பது மக்களை எந்தளவு நெருக்குகிறது

என்பதை நாம் அறிவோம்.

ஆனால், அதைப்பற்றியெல்லாம் கணக்கில் எடுக்காது அரசு நட்டமடையாதவாறே நடவடிக்கை எடுத்து வருகிறது.

மக்களுக்கு எதுவித நிவாரணமும் இல்லை.அரசு மட்டும் நஷ்டத்தில் இயங்கக்கூடாது. இதுதான் அரசின் நிலைப்பாடு.

இந்த சிக்கலுக்கு மத்தியில்தான் வட் வரி சுமையும் மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ளது.

இந்த நிலை இப்படியே இன்னும் சில காலம் தொடர்ந்தால் இலங்கை சோமாலியாவைவிட மோசமானதாக அமையும்.வறுமை மேலும் அதிகரிக்கும்.

பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையும். தொழில் வாய்ப்புகள் மேலும் இழக்கப்படும். சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை நிதியைப் பெறுவதற்காக நிதியத்தின் அடுத்த நிபந்தனைகளுக்கு உடன்பட்டே ஆக வேண்டும் என்கிறது அரசு.

முதலாம் தவணை நிதியைப் பெறுவதற்காக நிதியம் விதித்த நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தப் போய்த்தான் இவ்வளவு சிக்கல் மக்களுக்கு.

மேலும் நிபந்தனைகளை நிறைவேற்றப் போனால் நிலைமை மேலும் மோசமாகும்.

நாணய நிதியத்தைத் தவிர்த்து வேறு வழிகளில் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க இவர்களுக்குத் தெரியவில்லை.

அப்படி நாணய நிதியத்திடம் சென்று பொருளாதார பிரச்சினை தீர்ந்தால் பரவாயில்லை.மேலும் பிரச்சினையல்லவா கூடுகிறது.

நாணய நிதியத்தால் அரசின் பிரச்சினைதான் தீருகிறது.மக்களின் பிரச்சினை கூடுகிறது.

இது அரசின் தோல்விக்கு நிச்சயம் வழி வகுக்கும் என்பதால்தான் நாமல் ராஜபக்ஸ வட் வரியை எதிர்த்து அது தொடர்பிலான வாக்கடுப்பில் இருந்து தவிர்ந்துகொண்டார்.

தனது அரசியல் எதிர்காலத்தைக் காப்பாற்றுவது என்றால் ஓரளவாவது மக்களின் மக்கள் நிற்க வேண்டும்.அரசை எதிர்க்க வேண்டும்.

அப்படி சென்றால்தான் ஓரளவாவது தோல்வியில் இருந்து தப்ப முடியும் என்று நாமல் கருதுகிறார் அதனால்,இப்போது ரணில் எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்துள்ளார்.

நாமலின் தந்தை நாமலின் இந்தத் தீர்மானத்துக்கு இடம்கொடுத்துள்ளபோதிலும் அவர் ரணிலோடுதான் நிற்கிறார் தன்னைக் காப்பதற்காக நாமல் வகுக்கும் வியூகம் மக்களிடம் எடுபடுமா?

## தம்மிக்க...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தம்மிக்கவை வெட்டிவிட்டு வேறு மூவர் போட்டியிட விரும்புகிறார்கள் என்று தெரிவிக்கின்றன.

பசில் மற்றும் நாமலையும் சேர்த்தால் வேட்பாளர்களின் எண்ணிக்கை 6 ஆக மாறும் என்று தகவல் மேலும் கூறுகிறது.

அதேவேளை,நாமலை வேட்பாளராக நிறுத்துமாறு மொட்டு கட்சியின் பின் வரிசை எம்பிக்கள் கட்சிக்குள் அழுத்தம் கொடுத்து வருகிறார்கள் என்றும் அறிய முடிகிறது.

மறுபுறம்,மொட்டுக்குள் இருக்கும் ரணில் ஆதரவு குழுவினர் ரணிலையே மொட்டின் வேட்பாளராக நிறுத்துமாறு அழுத்தம் கொடுத்து வருவதையும் அறிய முடிகிறது.

இந்தக் குழப்பத்துக்கு மத்தியில் தம்மிக்க பெரேரா பிரசார பணிகளை தொடக்கியுள்ளார் என்றும் அறிய முடிகிறது.

## செங்கடல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பயன்படுத்துகின்றன. அவ்வாறு பயன்படுத்தும் கப்பல்களின் தற்காலிக தரிப்பிடமாக கொழும்பு துறைமுகம் மாறியுள்ளது.

இதனால் துறைமுகத்துக்கு வருமானம் அதிகரித்துள்ளது என்று துறைமுகத் தகவல்கள் கூறுகின்றன.

## மொட்டு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வருகின்ற தேர்தல்களில் மொட்டு எம்பிக்களின் ஆதரவு ஜனாதிபதிக்குத் தேவையாக இருப்பதால் அந்த அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு அவர் தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## கரட்டை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதிகரித்திருந்தபோதிலும்,கிராக்கி குறைந்துள்ளதால் அதன் விலையும் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது என்று கூறப்படுகிறது.







கேள்வி : ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பொருளாதார செயற்பாடு எவ்வாறு உள்ளது?

கேள்வி : ரணில் இரண்டாவது விருப்ப வாக்கை வைத்து வெல்வார் என்று அரசியல் நிபுணர்கள் கூறுகிறார்களே?

கேள்வி : ஆட்சிக்கு யார் வந்தாலும் ஐஆகு இடம் செல்லாமல் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது என்று ரணில் சொல்கிறாரே?

கேள்வி : சஜித்தின் பக்கம் பலர் இணைவதாக தெரிகிறதே ?

கேள்வி : நீங்கள் தனியாக ஜனாதிபதி வேட்பாளர்களை வேட்பாளரை நிறுத்துவீர்களா?

கேள்வி : மொட்டு கட்சியின் வேட்பாளர் யார் ?

கேள்வி : முதலில் இடம்பெறப்போவது ஜனாதிபதி தேர்தலா,நாடாளுமன்றத் தேர்தலா?



# ஜேவிபி ஆட்சியைப் பிடிக்குமா?

# அனுர ஜனாதிபதியாவாரா?

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் விமல் வீரவன்ச.அவரது பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பொருளாதார செயற்பாடு எவ்வாறு உள்ளது?**

பதில் : ரணில் இன்று மேற்கு நாடுகளினதும் இந்தியாவினதும் விருப்பத்துக்கு ஏற்ப செயற்படுகிறார். டெலிகொ ம் நிறுவனத்தை இந்தியாவுக்கு அல்லது சுபாஷ்கரன் அலி ராஜாவுக்கு விற்கப்போகிறார்.

அதேபோல்,விமான நிலையங்கள் இரண்டையும் விற்று 10 அல்லது 15 பில்லியன் பணத்தை சேமித்துக்கொள்வார்.

அந்தப் பணத்தில் கொஞ்சத்தை வைத்து ஒரு வருடத்துக்கு சர்வதேச கடனை செலுத்துவார்.இதனால் மீண்டும் கடன்பெறும் தகுதியை இலங்கை பெரும்.அதை பயன்படுத்தி ரணில் மீண்டும் கடனை பெறுவார்.

ரணில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக இருந்தால் இந்த வேலையை செய்துதான் போட்டியிடுவார்.இதைக் காட்டி நான்தான் பொருளாதார வீரன் என்று வாக்கு கேட்பார்.

இவ்வாறு செய்து மீண்டும் இந்த நாட்டை நாசமாக்கப்போகிறார். ஏற்கனவே தொழில்சாலைகள் மூடப்பட்டு லட்சக்கணக்கில் தொழில் வாய்ப்புகள் இழக்கப்பட்டுள்ளன.

எட்கா ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப் போகிறார். அவ்வாறு செய்தால் இந்தியாவில் இருந்து தொழிலாளர்கள் இங்கு வருவார்கள். தேங்காய் பார்ப்பவர்கள் கூட வருவார்கள்.இலங்கை தொழிலாளிகள் பாதிக்கப்படுவார்கள்.

**கேள்வி : ரணில் இரண்டாவது விருப்ப வாக்கை வைத்து வெல்வார் என்று அரசியல் நிபுணர்கள் கூறுகிறார்களே ?**

பதில் : எமது நாட்டு மக்கள் ஒருபோதும் இரண்டாவது விருப்ப வாக்கை அளிப்பதில்லை.விரும்பிய ஒருவருக்குத்தான் போடுவார்கள்.

ரணில் நினைக்கிறார் சஜிதா மற்றும் அனுர பெறுகின்ற வாக்குகளைவிட அதிகம் பெறுவார் என்று.

**கேள்வி : ஆட்சிக்கு யார் வந்தாலும் ஐஆகு இடம் செல்லாமல் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது என்று ரணில் சொல்கிறாரே?**

பதில் : பாகிஸ்தானில் அந்த பிரச்சினை வந்தபோது பாகிஸ்தான் ஐஆகு இடம் சொல்லவில்லையே.மத்திய கிழக்கு நாடுகளிடமும் சீனாவிடமும் கடனை வாங்கி நிலைமையை சீர் செய்தது.

நாமும் எமது நற்பு நாடுகளிடம் இவ்வாறு உதவி கேட்டிருக்க முடியும்.ஆனால்,செய்யவில்லை. கோத்தாபாயவிடம் அப்போதைய சீன தூதுவர் கூறினார் பொருளாதாரம் தொடர்பில் பாரதூரமான முடிவுகள் எடுப்பதாக இருந்தால் முதலில் எங்களிடம் சொல்லுங்கள் என்று.

அவர்கள் கடன் தருவதற்கு தயாராக இருந்தார்கள்.கோத்தாவும் அதைச் செய்யவில்லை.

**கேள்வி : சஜித்தின் பக்கம் பலர் இணைவதாக தெரிகிறதே ?**

பதில் : எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெல்ல முடியாது என்று நினைப்பவர்கள் அவர்களின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக வேறு கட்சிகளை தேடி ஓடுகிறார்கள்.

மாட்டு காளைக்குள் மாடுகள் மட்டும்தான் செல்லும்.

**கேள்வி : ஜேவிபி ஆட்சியை பிடிக்குமா?**

பதில் : கோத்தபாய மக்களை ஏமாற்றியதும் அவருக்கு வாக்களித்த 69 லட்சம் பேரில் சிலர் ஆத்திரமடைந்து அந்த ஆத்திரத்தை வெளிக்காட்டும் வழியாக ஜேவிபியை பயன்படுத்தினர். சிறியதை பெரிதாக்கிக் காட்டும் ஆற்றல் ஜேவிபிக்கு உண்டு .அதைத்தான் அவர்கள் இப்போது செய்கிறார்கள்.

**கேள்வி : அனுர முன்னணியில் இருக்கிறார் என்று ஆய்வுகள் கூறுகின்றனவே ?**

பதில் : அதில் எனக்கு உடன்பாடு இல்லை.இருக்கின்ற 3 வீதம் என்ற நிலையில் இருந்து அவர்கள் கொஞ்சம் உயர்ந்துள்ளார்கள்.ஆனால்,ஆட்சியை பிடிக்கும் நிலையில்,அவர்கள் இல்லை.

ரணில் இந்த நாட்டுக்குச் செய்யப் போகும் முக்கியமான பிரச்சினைகள் பற்றி ஜேவிபி பேசுவதில்லை. நாட்டுக்கு எதிராக அவர் செய்யப்போகும் ஒப்பந்தங்கள் பற்றிப் பேசுவதில்லை.

அவர் திருடன்,இவர் திருடன் என்று மாத்திரமே பேசுகிறார்கள்.முக்கிய பிரச்சினைகளை விட்டுவிட்டார்கள். சர்வதேசத்துக்கு வலிக்கும் வகையில் இவர்களால் பேச முடியாது.

இந்தியாதான் எமது பொருளாதாரத்துக்கு எதிராக உள்ளது. அந்த நாடு எமது பொருளாதாரத்தை ஆக்கிரமிப்பதற்கு முயற்சி செய்கிறது.இப்படியே போனால் இலங்கை மிஞ்சாது.

இந்தியாவின் 29ஆவது மாநிலமாக இலங்கையை உருவாக்குவதற்கு முயற்சி செய்கிறார்கள்.

இதுபற்றி பேசாமல் ஆட்சியை பிடித்து என்ன பிரயோசனம்.இப்படியானவர்களால் எப்படி ஆட்சியை பிடிக்கும்?

**கேள்வி : நீங்கள் தனியாக ஜனாதிபதி வேட்பாளர்களை வேட்பாளரை நிறுத்துவீர்களா?**

பதில் : முதலில் ரணிலின் உள்ளக பிரச்சினைகளை வெளிப்படுத்த வேண்டும். அதை நாம் செய்வோம்.

**கேள்வி : மொட்டு கட்சியின் வேட்பாளர் யார் ?**

பதில் : அவர்கள் வேட்பாளர்களை நிறுத்தமாட்டார்கள்.நிறுத்தி என்ன செய்ய முடியும்?

**கேள்வி : உங்களுடன் கூட்டணி அமைப்பதற்கு ரொஷான் ரணசிங்க,தயாசிறி ஜயசேகர ஆகியோர் உங்களுடன் பேசினார்களா?**

பதில் : தயாசிறி பேசினார்.தொடர்ந்து பேச்சு நடக்கிறது. ரொஷான் பேசவில்லை.

**கேள்வி : முதலில் இடம்பெறப்போவது ஜனாதிபதி தேர்தலா, நாடாளுமன்றத் தேர்தலா?**

பதில் : ஜனாதிபதி தேர்தல்தான் இடம்பெறும்.இலங்கையில் நாம் முதன் முதலாக முகம் கொடுக்கும் பயங்கரமான தேர்தலாக அது இருக்கும்.– என்றார்.

> இந்தியாதான் எமது பொருளாதாரத்துக்கு எதிராக உள்ளது. அந்த நாடு எமது பொருளாதாரத்தை ஆக்கிரமிப்பதற்கு முயற்சி செய்கிறது. இப்படியே போனால் இலங்கை மிஞ்சாது. இந்தியாவின் 29ஆவது மாநிலமாக இலங்கையை உருவாக்குவதற்கு முயற்சி செய்கிறார்கள்.



# அழைக்காமல் சென்ற மஹிந்த

லங்கா தீப சிங்கள பத்திரிகையின் பிரதம ஆசிரியரின் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.அந்த நிகழ்வுக்கு அரசியல்வாதிகளை அழைப்பதில்லை என்று ஏற்பாட்டு குழு முடிவெடுத்தது.

இந்த விடயத்தை அறிந்த மஹிந்த ராஜபக்ஸ சாகர காரிவசமைத் தொடர்புகொண்டு பேசினார்.

"லங்காதீப எடிட்டர் எங்கட ஊர் ஆள்.அவர்ட நிகழ்வுல கலந்துகொள்றதுக்கு அழைப்பு வரல்ல.நம்ம வாசகர் என்ற அடிப்படையில அழைக்காம போகலாம்தானே என ..." என்று கேட்டார்.

சாகர சரி என்று சொன்னதும் தாமதிக்காமல் விழாவுக்குச் சென்றார் மஹிந்த.

இதை ஏற்பாட்டு குழுவினர் எதிர்பார்க்காததால் அதிர்ந்து போயினர்.இருந்தாலும்,உயர்ந்த வரவேற்பை அவர்கள் மஹிந்தவுக்கு வழங்கினர்.




## பொலிஸ் வேலை பார்த்த பிரசன்ன



மொட்டு கட்சியின் மாநாடு அண்மையில் கொழும்பு சுகாததாச உளரங்களில் இடம்பெற்றது அல்லவா.

அன்றைய தினம் கடும் மழை.அதையும் தாண்டி மாநாட்டுக்கு மக்களை தனது மாவட்டமான கம்பஹா மாவட்டத்தில் இருந்து அழைத்துக்கொண்டு நிகழ்வு இடத்துக்கு வந்து சேர்ந்தார் பிரசன்ன ரணதுங்க.

அப்போது அவர் கடுமையாக நனைந்திருந்தார்.

அதுபற்றி விசாரித்தார் மஹிந்த.

"வார வழியில  கடும் மழ நேரத்தோடு நிகழ்வுக்கு வந்து சேரனும். அதான் வாகனத்த விட்டு இறங்கி ட்ராபிக் பொலிஸ் வேல பாத்த..." என்றார் சிரித்துக்கொண்டு.

## தம்மிக்கவின் பிரசார யுக்தி



தம்மிக்க பெரேராவை மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு அக்கட்சி எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு தகவல் கொடுத்தது மொட்டு கட்சியில் உள்ள சில எம்பிக்கள்தானாம்.

அவர்கள் அவ்வப்போது கட்சிக்குள் நடக்கும் விடயங்களை ஜனாதிபதிக்கு ரகசியமாக எத்திவைப்பார்களாம்.

தம்மிக்கவை வேட்பாளராக நிறுத்துவதற்கு மொட்டு கட்சி விதித்திருக்கும் மூன்று முக்கிய நிபந்தனைகள்பற்றியும் அவர்கள் ரணிலிடம் கூறியுள்ளனராம்.

மேலும்,தம்மிக்க தனது தேர்தல் பிரசார நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஒரு கம்பனியை நாட்டியுள்ளாராம்.

அது இந்திய பிரதமர் மோடியை வெல்ல வைப்பதற்கு பிரசார நடவடிக்கையை வடிவமைத்த கம்பனியாம்.அதுவும் ரணிலுக்குத் தெரியுமாம்.



## சேர்...திரும்பவும் வாங்க..

நத்தார் கொண்டாட்டத்தையொட்டி கிரிந்திவல பகுதியில் கண்காட்சி ஒன்று இடம்பெற்றது.அதை ஏற்பாடு செய்தது மொட்டு கட்சியின் மகிழ்ச்சியான குடும்பம் என்ற அமைப்பு.

மொட்டு கட்சியின்   பின் வரிசை எம்பிக்கள் உருவாக்கியயதுதான் இந்த அமைப்பு.

இந்த கண்காட்சியின் இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்றார் மஹிந்த ராஜபக்ச.

அங்கு குவிந்த பெண்கள் மஹிந்தவிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்தனர்."" சேர்..நீங்க திரும்பவும் வாங்க சேர்..நீங்க வந்தாதான் இந்த பிரச்சினையை முடிக்கலாம் "" என்று அவர்கள் கூறினார்கள்.

"" நீங்க சொன்னா திரும்பவும் வாறன்..."" என்றார் மஹிந்த.

## இவர் யார்... என்ன செய்கிறார்?




தேர்தல் காலங்களில் வாக்குகளை கவருவதற்காக அரசியல்வாதிகள் வித்தியாசமான வசனங்களை பாவித்து பிரசாரங்கள் செய்வது வழமை.

அந்த வகையில்,மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா "" இவர் யார்,,என்ன செய்கிறார் "" என்ற வாசகம் அடங்கிய சுவரொட்டிகளை ஒட்டியிருந்தார்..

அதே வாசகத்தைக் கொண்ட சுவரொட்டிகளை சஜித்தை ஓட்டுமாறு அவருக்கு நெருக்கமானவர்கள் கூறி வருகிறார்களாம்.

அது பிரேமதாசாவையும் அவரது பாரிய சேவைகளையும் நினைவூட்டி அதிக வாக்குகளை பெற்றுத் தரும் என்று அவர்கள் கூருகிறார்களாம்.

## இந்த எம்பியை விரட்டியது யார்?



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் எம்பி ஷான் விஜயலல் இந்த மாதம் முதலாம் திகதி சஜித்தின் கட்சியுடன் இணைந்தார் அல்லவா.அதற்கு சு.கவுக்குள் இருக்கின்ற ஒருவர்தானாம் காரணமாம்.

அவர் சிறிலங்கா சுதந்திர கட்சியின் காலி மாவட்ட மத்திய குழு உறுப்பினராம்.

காலி மாவட்டத்தின் சு.கவின் மாவட்டத் தலைவர் பதவியை ஷான் விஜயலாலிடம் இருந்து கைப்பற்ற வேண்டும் என்பது அவரின் நீண்ட நாள் கனவாம்.

அதற்காகவே  நன்கு திட்டமிட்டு ஷானை விரட்டியுள்ளாராம் அந்த அரசியல்வாதி.

## அடுத்து தயாசிறி..?



ஷான் விஜயலால் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து மைத்திரிபால சிறிசேனவுக்கு அதிர்ச்சி குடுத்ததுபோல் தயாசிரியும் இணைந்து அதிர்ச்சி கொடுப்பார் என்று அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகிறது.

தயாசிரியிடம் இருந்து சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொது செயலாளர் பதவி பறிக்கப்பட்டது முதல் அவரை ஐக்கிய மக்கள் சக்திக்குள் இணைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஷான் இப்போது ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளதால் உட்சாகமடைந்த்துள்ள சஜித் தரப்பு தயாசிரியையும் விரைவில் இணைக்கும் என்று சஜித் தரப்பு கூறுகிறது.

# விவசாயத்தில் புரட்சியை ஏற்படுத்தல் லஸ்ஸன புளோரா



விவசாயத்தில் முன்னணியில் உள்ள லஸ்ஸன அக்ரி இன்னோவேஷன்ஸ் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு புத்தம் புதிய, ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான பழங்கள் மற்றும் காய்கறிகளை வழங்குவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட தொலைநோக்கு நிறுவனமாக திகழ்கிறது.

இந்த விஸ்தரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதன் மூலம், லஸ்ஸன அக்ரி புத்தாக்கங்களை வளர்ப்பதில் உறுதியாக உள்ளது.

அவர்களின் அர்ப்பணிப்பு உற்பத்தி வரம்பை மேம்படுத்துவதற்கு அப்பால் அமைந்துள்ளது. இது முழு விவசாய விநியோகச் சங்கிலியையும் மற்றும் புத்தாக்கமான தீர்வுகளையும் உள்ளடக்கியது.

புத்தம் புதியதாக மட்டுமல்லாமல் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கும் தேவையான உணவு வகைகளுக்குமான அதிகரித்து வரும் நுகர்வோர் கேள்விக்கு சிறந்த தீர்வினை வழங்கும் வகையில் நிறுவனமானது செயற்பட்டு வருகிறது.

ஒரு அற்புதமான நடவடிக்கையாக, இலங்கையில் நவீன விவசாயத்தை மறுவடிவமைக்க லஸ்ஸன அக்ரி இன்னோவேஷன்ஸ் அமைக்கப்பட்டுள்ளது.

விலைவாசி உயர்வு, குறைந்த தரம், அதிகப்படியான இரசாயன பயன்பாடு மற்றும் காலநிலை மாற்றத்தின் பாதிப்பு போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அமைந்துள்ள இந்த திட்டமானது விவசாயிகளுக்கு அதிநவீன தொழில்நுட்பம், பசுமை இல்லங்கள் மற்றும் துணைப் பொருட்களை வழங்குவதுடன், உத்தரவாதமான வருவாயை உறுதி செய்வதற்கான மீண்டும் கொள்வனவு செய்தல் டீரலடியஉம ஒப்பந்தத்தையும் உள்ளடக்கியது.

அக்ரிபிளாஸ்ட் ப்றொடெக்டட் கல்டிவேசன் பிரைவேட் லிமிடெட் [Agriplast protected cultivation PVT LTD] உடனான ஒத்துழைப்பு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும், இது உயர் தொழில்நுட்ப மற்றும் மத்திய–தொழில்நுட்ப பசுமை இல்லங்களை உள்நாட்டு விவசாயிகள், தொழில்முயற்சியாளர்கள் மற்றும் இலங்கையின் விவசாயத்தை மாற்றுவதில் ஆர்வமுள்ள முதலீட்டாளர்களுக்கு மிகவும் நியாயமான விலையில் வழங்குகிறது.

# TIN பதிவு தொடர்பான விளக்கம்:

வரி அடையாள இலக்கம் (TIN) என்பது நாடெங்கிலும் பெரும் பேசுபொருளாக மாறியுள்ளதுடன், இந்த விடயம் தொடர்பில் பல்வேறு தவறான விடயங்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

TIN இலக்கத்தைக் கொண்டிருப்பது என்பது சுயமாகவே வரிக் கொடுப்பனவை மேற்கொள்ளும் பொறுப்பிற்கு வழிவகுக்காது என்பதை தெளிவுபடுத்த வேண்டியது மிகவும் அத்தியாவசியம். அதற்கு மாறாக, எவ்விதமான சிக்கல்களுமின்றி பல்வேறு அரச நிறுவனங்களால் வழங்கப்படும் பல்வேறு சேவைகளை சௌகரியமாகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினை இது மக்களுக்கு வழங்குகின்றது.

ஜனவரி 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வரிசெலுத்தும் அடையாள இலக்கத்தை (TIN) பெற்றுக்கொள்ளாதவர்கள் ரூபா 50,000 க்கு மேற்படாத தொகையை தண்டப்பணமாக செலுத்த வேண்டி ஏற்படலாம் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எச்சரித்துள்ளது.

TIN இலக்கத்தைப் பெற்றுக்கொள்வது என்பது சுயமாகவே வருமான வரி செலுத்தும் பொறுப்பிற்கு ஆளாக வேண்டி ஏற்படாது என்பதைச் சுட்டிக்காட்டி, இலங்கையில் வரி அடையாள இலக்கங்களின் வகிபாகம் தொடர்பில் நிதி அமைச்சு அண்மையில் தெளிவுபடுத்தியுள்ளது.

18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய, வருடாந்த வரி விலக்கான ரூபா 1.2 மில்லியன் என்ற தொகைக்கு மேற்பட்ட தொகையை வருமானமாக ஈட்டுகின்றவர்கள் மாத்திரமே வருமான வரியைச் செலுத்த வேண்டும் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

COYLE
RECOGNITION THROUGH EXCELLENCE
Since 1999

# புதிய Samsung தொழில்நுட்பத்தினை ஏற்றுக்கொள்ள அனைவருக்கும் அழைப்பு



2023 ஆம் ஆண்டு நிறைவடையும் இத்தறுவாயில், Samsung Electronics ஆனது இல்லங்களுக்கான மின்னணு சாதனங்களின் ஜாம்பவானாகத் திகழ்கின்றது.

அதன் தொழிற்பாடு, நயப்பாங்குப் பாணி மற்றும் பாவனையாளர் நட்பு என்பன தடையின்றி இணைக்கும் உயர் மதிப்பு தயாரிப்புகளுக்கு ஏற்றவிதமாக, Samsung ஆனது நுகர்வோரை, ஆரம்பித்திருக்கும் இப்புதிய ஆண்டில் தன்னோடு கை கோர்த்துக் கொண்டு சிறந்த பயணத்தினைத் தொடங்க அழைக்கின்றது.

உலகின் முன்னணி Brand களின் மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனமான Brand Finance ஆனது, இலங்கையில் மிகவும் விரும்பப்படும் இல்லத்து உபகரணங்களின் Brand ஆக Samsung ஆனது தனது நிலையினை உறுதிப் படுத்தியிருப்பதன் இரகசியம் என்னவெனில், தனிச்சிறப்புவாய்ந்த அனுபவங்களினை அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருவதும், மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான அதன் தொடர்ச்சியான உறுதியான அர்ப்பணிப்புமே என்பதனை நிரூபித்துக் காட்டியுள்ளது எனத் திடமாகக் கூறியுள்ளது.

ஆம்.. ஆம் வாடிக்கையாளர் திருப்திக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலமும், தொடர்ந்தும் புத்தாக்கங்களினைப் படைப்பதன் மூலமும் இல்லங்களுக்கான மின்னணு சந்தையில் தனது முதன்மை நிலையினைத் தக்க வைத்துக் கொள்ளும் Samsung இன் உறுதிப்பாட்டினை, இம் மதிப்புமிக்க அங்கீகாரம் ஆனது உறுதிப்படுத்தியுள்ளது.

# சுவ திவியவின் முதலாவது பொது நிகழ்ச்சித்திட்டம்





நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட இலாப நோக்கற்ற நிறுவனமான Suva Diviya நிறுவனம், இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தினால் "Unmask Diabetes" என்ற தொனிப்பொருளின் கீழ் ஒரு சிறப்பு பொது நிகழ்ச்சியை நடத்தியது,.

இதில் 300 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். நீரிழிவு நோயைத் தடுப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் முன்கூட்டியே நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்துவதே திட்டத்தின் நோக்கமாகும்.

இலங்கையில் நீரிழிவு நோய் பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. நான்கு பேரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் உள்ளது, அத்துடன் 30% பேருக்கு நீரிழிவு நோய்க்கு முந்தைய அபாயம் உள்ளது.

நகரத்தில் வசிக்கும் இளைஞர்களிடையே நீரிழிவு நோய் வேகமாக அதிகரித்து வருவதால் இந்த நிலைமை அதிக கவனம் செலுத்த வேண்டிய பிரச்சனையாக மாறியுள்ளது.

மேலும் உடற்பயிற்சியின்றி அவர்களின் செயலற்ற வாழ்க்கை முறை இந்த சிக்கலை அதிகப்படுத்துகிறது மற்றும் இது நாட்டின் பணியாளர்களை நேரடியாக பாதிக்கிறது. ஆனால் ஆச்சரியம் என்னவென்றால், இந்த நாட்டில் கணிசமான எண்ணிக்கையிலான மக்கள், சுமார் ஒரு மில்லியன், தங்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறதா என்று தெரியாதுள்ளனர்.

# IIHS நிறுவனத்துக்கு Coventry அங்கீகாரம்

இலங்கையின் சுகாதார மருத்துவக் கற்கைத் துறையின் முன்னோடியாக திகழும் International Institute of Health Sciences (IIHS) நிறுவனம், ஐக்கிய இராச்சியத்தின் (Coventry) கொவென்ட்ரீ பல்கலைக்கழகத்தால் அதன் முத்திரையிடப்பட்ட பல்கலைக்கழகங்களில் ஒன்றாக பெயரிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தமது வர்த்தக நாமத்தில் பல்கலைக்கழகமொன்றை உருவாக்குவதற்கான சாத்தியம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தொடர் ஆய்வின் போது IIHS நிறுவனத்துக்கும் (Coventry) கொவென்ட்ரீ பல்கலைக்கழகத்துக்குமிடையே நீண்ட காலமாக முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல்களின் விளைவாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டில் பட்டப்படிப்பு தாதியர் மாணவர், மாணவியர்களை இலக்காக கொண்ட நிகழ்ச்சித்திட்டமாக இந்த இரு தரப்பு ஒத்துழைப்பு திட்டம் தொடங்கப்பட்டது.

அதுவே பிற்காலத்மில் உயர் கல்வி மற்றும் மாற்றத்துக்குள்ளான கல்வி முறையொன்றை அடைவதை இலக்காக கொண்ட பரந்துபட்ட நிகழ்ச்சித்திட்டமாக வளர்ச்சி கண்டுள்ளது.

மேற்படி இரு தரப்பு ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தும் வகையில் IIHS நிறுவனத்துக்கும் (Coventry) கொவென்ட்ரீ பல்கலைக்கழகத்துமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.



# உலகின் முதல் ஸ்மார்ட் சிட்டி மன்றம் சவூதி தலைமையில்



(காலித் ரிஸ்வான்)

உலகின் முதல் ஸ்மார்ட் சிட்டி மன்றத்தை சவூதி அரேபியாவின் தரவுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆணையம் (SDAIA) வருகின்ற பெப்ரவரி மாதம் 2 முதல் 13 வரை சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் நடாத்த தீர்மானித்துள்ளது.

vnudh என்ற கண்காட்சிகளுக்கான அரங்கத்தில் நடக்கவிருக்கும் இம்மன்றத்தில் 40க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 80 பேச்சாளர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வைப் பற்றி, SDAIA இன் தலைவர் கலாநிதி அப்துல்லா பின் ஷரஃப் அல்-கம்டி கருத்து தெரிவிக்கையில், "இந்த உலகளாவிய மன்றமானது ஸ்மார்ட் நகரங்கள் என்றால் என்ன என்பது பற்றியும் அவற்றின் மற்றும் முக்கியத்துவத்தையும் அறியப்படுத்தும் வகையில் அமையப்பெறவுள்ளதோடு, இந்த நகரங்களை உருவாக்க செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்றும் தெளிவூட்டவுள்ளது" என கூறினார்.

சவூதி அரேபியாவின் பிரதமர் மற்றும் SDAIA இன் இயக்குநர்கள் குழுவின் தலைவருமான பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்களின் வழிகாட்டளுக்கு இணங்கவே இந்த மன்றத்தை ஏற்பாடு செய்வதில் இராச்சியம் ஆர்வம் காட்டியதாகவும் அவர் கூறினார்.

தரவுகள் மற்றும் AI அமைப்பு, மேம்பாடு மற்றும் சவூதியில் அதன் செயல்பாடுகளுக்கான தேசியக் குறியீடாக SDAIA இன் முக்கியப் பங்கையும் அவர் எடுத்துரைத்தார்.

மேம்பட்ட தொழில்நுட்பங்களின் துரித வளர்ச்சியை அங்கீகரிக்கும் விதத்தில் உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் தங்கள் குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த யுஐ போன்ற தொழிநுட்பங்களை பயன்படுத்தியும் அவற்றை மேம்படுத்தியும் வருகின்றன. இதற்கு சவூதி அரேபிய இராச்சியமும் விதிவிளக்கல்ல.

ஸ்மார்ட் நகரங்களின் எதிர்காலம் பற்றிய கலந்துரையாடல், அவற்றின் உள்கட்டமைப்புடன் தொடர்புடைய சவால்களை எதிர்கொள்தல் மற்றும் உலகெங்கிலும் உள்ள நகரங்களில் வளர்ந்து வரும் மக்கள்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான புதுமையான தீர்வுகளை ஆராய்வதுடன் சம்மந்தப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் அமர்வுகளை இம்மன்றம் கொண்டிருக்கும்.

மேலும், 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு (SDGs) இணங்க, ஸ்மார்ட் நகரங்களை நிறுவுவதில் சவூதி மற்றும் பிற நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றங்களையும் இம்மன்றம் எடுத்துக் காண்பிக்கவுள்ளது.



## LSSL இற்கு விருதுகள்

கல்வனைஸ் செய்யப்பட்ட உருக்குக் கம்பிகளை உற்பத்தி செய்வதில் முன்னிலை வகித்து வருகின்ற Lanka Special Steels Limited (LSSL) நிறுவனம், தரம் மற்றும் உற்பத்தித்திறன் தொடர்பான தேசிய விருதுகள் மாநாடு 2023 (National Convention on Quality and Productivity - NCQP) நிகழ்வில் மகத்தான சாதனையை நிலைநாட்டியுள்ளமையை பெருமையுடன் அறிவித்துள்ளது.

இலங்கை தரம் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்கான சங்கத்தினால் (Advancement of Quality and Productivity - SLAAQP) ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பெருமதிப்பிற்குரிய தங்க விருதுகள் நான்கினையும், வெண்கல விருதொன்றையும் LSSL வென்றுள்ளது.

"புத்தாக்கமிக்க தரம் கொண்ட தீர்வுகள் மூலமாக நிலைபேணத்தகு அபிவிருத்தி" (Sustainable development through innovative quality solutions) என்ற கருப்பொருளில் இடம்பெற்ற NCQP விருதுகள் நிகழ்வு, உற்பத்தி மற்றும் சேவைகள் துறையில் தரம் மற்றும் உற்பத்தித்திறனின் சிறப்பினைப் போற்றியுள்ளது.

மேம்பாட்டைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதில் LSSL இன் வெற்றியானது சிறந்த செயல்பாட்டில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை காண்பித்துள்ளதுடன், அதன் பல்வேறுபட்ட செயல்பாட்டு அணிகளே இந்த வெற்றிக்கு காரணமாகும்.




## பிரித்தானிய இளவரசி பிரிட்டிஷ் கவுன்சில் அலுவலகத்துக்கு விஜயம்

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த பிரித்தானிய இளவரசி மற்றும் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோர், கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சில் அலுவலகத்துக்கு ஜனவரி 12ஆம் திகதி விஜயம் செய்திருந்தனர்.

இலங்கைக்கான தமது விஜயத்தின் போது பங்கேற்கவிருந்த தொடர் விஜயங்களின் அங்கமாக இந்த பயணம் அமைந்திருந்தது.

திக்ஹேன பாடசாலையின் மாணவர்களின் பாரம்பரிய நாட்டிய நிகழ்வுடன் பிரிட்டிஷ் கவுன்சிலுக்கு அவர்கள் வரவேற்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'Arches of Awe' கண்காட்சியையும் அவர்கள் பார்வையிட்டனர்.

இந்த கண்காட்சியில் 1954 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பிரித்தானிய மகாராணி எலிசபெத் II மற்றும் எடின்பரோ டியுக் அவர்களை வரவேற்கும் முகமாக கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 21 தோரணங்களின் புகைப்படங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

## DFCC வங்கிற்கு விருது



DFCC வங்கி, அதனது eKYC (electronic-know-your-customer – இலத்திரனியல் முறையில் உங்களது வாடிக்கையாளர் விபரங்களை அறிந்துகொள்ளுதல்) தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்தியமைக்காக, Global Banking and Finance Review இல் Best Banking Process என்ற மதிப்புமிக்க விருதை அண்மையில் சம்பாதித்துள்ளது.

இந்த விருதானது, குறிப்பாக eKYC இல் டிஜிட்டல் புத்தாக்கம், பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டுத் திறன் ஆகியவற்றில் வங்கியின் ஓயாத அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காண்பிக்கின்றது.

இந்த முறைமையானது தங்குதடையின்றியும், பாதுகாப்பாகவும் 100% டிஜிட்டல்ரீதியாக வாடிக்கையாளர்களை புதிதாக உள்வாங்கும் வசதிக்கு வழிகோலியுள்ளதுடன், வாடிக்கையாளர்கள் கணக்கினை ஆரம்பிப்பதற்கு கிளைக்கு வருகை தர வேண்டிய சிரமங்களையும் போக்குகின்றது. இது தலைசிறந்த டிஜிட்டல் வழி சேவை மற்றும் வழங்கலுக்கு வித்திட்டுள்ளது.

புதிய வாடிக்கையாளர்களை உள்வாங்கும் போதும், ஏற்கனவே வாடிக்கையாளர்களாக உள்ளவர்களின் விபரங்களை சரிபார்க்கும் போதும் அவர்களின் தகவல் விபரங்களை விரைவாகவும், தங்குதடையின்றியும் மற்றும் துல்லியமாகவும் டிஜிட்டல்ரீதியாக சரிபார்ப்பதற்கு மேம்பட்ட டிஜிட்டல் தொழில்நுட்பங்களை DFCC வங்கி கைக்கொண்டுள்ளமையை அங்கீகரிக்கும் வகையில் இந்த மதிப்பிற்குரிய விருது வழங்கப்பட்டுள்ளது.



# 10 ஆண்டுகள் நிறைவில் TIIKM


கல்வித்துறையை வலுப்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முன்னணி அறிவு முகாமைத்துவ நிறுவனமான TIIKM, அதன் 10வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், ஒரு தசாப்தத்தின் கல்விச் சிறப்பு, புத்தாக்கம் மற்றும் உலகளாவிய தாக்கத்தை வளர்ப்பதில் அதன் பங்கினை பெருமையுடன் நினைவுகூருகிறது.

2013 இல் நிறுவப்பட்டதிலிருந்து, புதுமையான முயற்சிகள் மற்றும் அதிநவீன ஆராய்ச்சி முயற்சிகள் மூலம் உலகளவில் கல்விசார் நிபுணர்களை மேம்படுத்துவதில் TIIKM முன்னணியில் உள்ளது.

10வது ஆண்டு நிறைவு கொண்டாட்டமானது ஒரு தசாப்தத்தின் ஆழமான சாதனைகள், மூலோபாய கூட்டாண்மை மற்றும் கல்வித்துறையை மாற்றியமைக்கும் பங்களிப்புகளை பிரதிபலிக்கும் ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகும்.

TIIKM அதன் உலகளாவிய வலைப்பின்னலான கல்விசார் ஒத்துழைப்பாளர்கள், அனுசரணையாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது, அவர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்புகள் நிறுவனத்தின் பயணத்தை வடிவமைப்பதிலும், உலகெங்கிலும் உள்ள கல்விச் சமூகங்களை மேம்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

கல்வித்துறையில் அதன் அர்ப்பணிப்புக்கு ஏற்ப, TIIKM ஆனது சமீபத்தில் Alpha One 2023 விருது வழங்கும் விழாவை பெருமையுடன் நடத்தியது.அதன் ஊழியர்களின் சிறப்பான பங்களிப்புகளை அங்கீகரித்து கௌரவித்தது.



# BCI Campus இன் Coding Club

BCI Campus குறிமுறையிடல் கழகத்தை [Coding Club] ஆரம்பித்திருப்பதுடன், முதலாவது நிறுவுதல் விழாவை 2023 நவம்பர் 04ஆம் திகதி நடத்தியது.

குறிமுறையிடல் மற்றும் கணினி நிரலாக்கம் தொடர்பில் ஆர்வமுள்ள அதன் உறுப்பினர்கள் மத்தியில் திறனை வளர்த்து அதனை ஊக்குவிப்பதே இந்தக் கழகம் உருவாக்கப்படுவதற்குக் காரணமாகும். இது கீழ் வரும் விடயங்களை உள்ளடக்கியிருப்பதுடன், இவற்றுடன் மாத்திரம் மட்டுப்படவில்லை.

1) குறிமுறையிடல் சம்பந்தப்பட்ட திட்டங்கள் தயாரிக்கும்போது அது பற்றிய அறிவு, திறன் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து உறுப்பினர்கள் மத்தியில் கூட்டுக் கற்றல் சூழலை வழங்குதல்.

2) குறிமுறையிடல் தொடர்பான செயலமர்வுகள், நிரலோட்டம் மற்றும் குறிமுறையிடல் சவால்கள் மற்றும் ஏனைய கல்விசார் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல்.

3) கோட்பாட்டு ரீதியான அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக நிஜ உலகத் திட்டங்களுக்கு நடைமுறை ரீதியான கற்றல் அனுபவங்களை வழங்குதல்.

4) உள்ளிரப்புப் பயிற்சி, வேலைகள் அல்லது உயர் கல்விக்கு விண்ணப்பிக்கும் போது மதிப்புமிக்கதாக இருக்கும் திட்டங்களுக்கான அடிப்படைகளை உருவாக்குவதற்கான பாதையை நிறுவுதல்.

தொழில்நுட்பம் மற்றும் குறிமுறையிடலில் மாணவர்களின் திறன்களை வலுப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்வதால் இந்த நிகழ்வானது BCI Campus இற்கு குறிப்பிடத்தக்க வெற்றியைக் கொடுக்கும் ஒன்றாக அமைந்தள்ளது.

# பசுமை ஐதரசன்: பூச்சிய காபன் எதிர்காலத்தை நோக்கி...



முழுமையான பூச்சிய காபன் வெளியேற்றத்தை அடைவதில் பசுமை ஐதரசனின் முக்கியத்துவத்தை அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி, உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) 54ஆவது வருடாந்த கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

”செலவுகளைக் குறைத்தல்: நிகர பூச்சிய காபனை அடையும் பாதையில் பசுமை ஐதரசனை மேம்படுத்துவதற்கான திறவுகோல்” எனும் தலைப்பில், தூய்மையான மற்றும் புதுப்பிக்கத்தக்க எதிர்காலத்தை நோக்கி உலகம் மாற முயற்சிப்பதற்கு அமைய, கனிம எரிபொருளுக்கு ஒரு முக்கியமான மாற்றீடான பசுமை ஐதரசனின் நம்பகத்தன்மை மற்றும் திறன் பிரதிபலிக்கிறது என அதானி இங்கு வெளிப்படுத்தினார்.

WEF இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில், சூழலுக்கும், அபிவிருத்திக்கும் பசுமை ஐதரசனின் நன்மைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பூச்சிய காபன வெளியீட்டுடனான தூய்மையான எரிபொருளாக பசுமை ஐதரசன் விளங்குவதையும், அதன் நம்பகத்தன்மையையும் அது எடுத்துக் காட்டுகிறது.

உலகம் முழுவதும் காபன் நடுநிலைப்படுத்தல் பற்றிய கனவை நனவாக்குவதற்கு பசுமை ஐதரசன் ஒரு திறவுகோலாக அமையும். ஐதரசன் ஒரு சாத்தியமான வலுசக்தி சேமிப்பு ஊடகமாக அறியப்படுவதோடு, அதன் எரிபொருள் கலங்களில் மின்சாரத்தை உற்பத்தி செய்து, ஒரேயொரு கழிவுப் பொருளாக நீரை வெளியிடுகிறது.

# பீப்பிள்ஸ் லீசிங் இற்கு வெள்ளி விருது




இலங்கையின் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின் (NBFI) துறையில் முன்னணி பெற்று விளங்கும் பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி (PLC), CA Sri Lanka TAGS விருதுகள் 2023 இல் மதிப்புமிக்க வெள்ளி விருதைப் பெற்றதன் மூலம் நிதி அறிக்கையிடலில் சிறப்பு பெற்று திகழ்வதற்கான தனது அர்ப்பணிப்பை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது.

இந்த கௌரவம் மிக்க நிகழ்வானது டிசம்பர் 12, 2023 அன்று கொழும்பு ஷங்ரி-லா ஹோட்டலில் , பெருநிறுவன அறிக்கையிடலில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், நிர்வாகம் மற்றும் நிலைபேறாண்மை ஆகியவற்றில் அவதானம் செலுத்துவதை முன்னிலைப்படுத்தி கொண்டாடப்பட்டது.

“பன்முக பரிமாணம்” எனும் தலைப்பில் 2022/23க்கான தனது வருடாந்த அறிக்கைக்கு விருது பெற்றதன் மூலம் PLC யின் இந்த வருட சாதனையானது குறிப்பிடத்தக்க மைல் கல்லை அடைந்துள்ளது.

இந்த அறிக்கையின் கருப்பொருளானது பன்முக பரிமாண வளர்ச்சி மற்றும் நிலைப்பேறாண்மையில் கவனம் செலுத்துவதானது டிஜிட்டல் முன்னேற்றம் மற்றும் வலுவான பெரு நிறுவன நிர்வாகம் ஆகியவற்றில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பினை தடையின்றி சீரமைக்கிறது.

TAGS விருதுகளில் இந்த பாராட்டு, ஒருங்கிணைந்த அறிக்கையிடலில் PLC இன் சமீபத்திய வெற்றிகளை மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது.

# Sweet Embrace அறிமுகம்




இலங்கையில் Dulux பெயின்ட் தயாரிப்பாளர்களான AkzoNobel பெயின்ட்ஸ் நிறுவனம், பெருமளவில் எதிர்பார்க்கப்பட்ட Colour of the Year: Sweet Embrace™ தெரிவை அறிமுகம் செய்துள்ளது.

pastel pink வர்ணத்தில், மென்மையான இறகுகள் மற்றும் மாலை முகில்களின் வர்ணத்தை ஒத்ததாக அமைந்துள்ள இந்த ஆண்டின் வர்ணத் தெரிவு, அமைதியான மற்றும் வரவேற்பு மிகுந்த பகுதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்திருக்கும்.

2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேச சமூக, அலங்கார மற்றும் நுகர்வோர் போக்குகள் தொடர்பான ஆழமான ஆய்வின் பிரகாரம், இந்த வரவேற்பை கொண்டுள்ள வர்ணமானது, நிலையில்லாத உலகில், எம்மை உரித்தாயிருப்பதற்கு செய்ய எதிர்பார்க்கும் நிலையில் இந்த வர்ணம் வரவேற்பை பெற்றதாக அமைந்திருப்பதை கண்டறிந்தோம்.

வீட்டில் ஆரம்பித்து, எமது தனிப்பட்ட நினைவுகள் மற்றும் உறவுகளை “விசேடமான ஏதேனுமொரு பகுதியில்” கொண்டிருப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

AkzoNobel’இன் உள்ளக பெயின்ட்கள் மற்றும் மேற்பூச்சுகள் நிபுணர்கள் மற்றும் சர்வதேச அலங்கார நிபுணர்கள் ஆகியோர், Sweet Embrace மற்றும் அதன் பிரத்தியேகமான வர்ணத் தெரிவுகள் போன்றன இந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற உதவியாக அமைந்திருக்கும் என AkzoNobel இன் சர்வதேச கலையம்ச நிலையத்தின் ஆக்கபூர்வ பணிப்பாளர் திருமதி. ஹெலீன் வென் ஜென்ட் கூறினார்.